ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2416/11 - 2024 දෙසැම්බර් මස 24 වැනි අඟහරුවාදා - 2024.12.24

*2416/11 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்**

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் உப பிரிவு 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகிய அநுர குமார திசாநாயக்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.*

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01.
2024 திசெம்பர் 24.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் “**2024 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்**” என அழைக்கப்படும்.

2. வணிக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் முன்வைத்த 2024, திசெம்பர் 20 ஆம் திகதிய 24/2256/817/001-II ஆம் இலக்க விஞ்ஞாபனம் தொடர்பாக 2024, திசெம்பர் 23 ஆம் திகதிய அமைச்சரவைத்


*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*தீர்மானத்திற்கமைய இவ் ஒழுங்குவிதிகள் விதிக்கப்படுவதோடு 2024, திசெம்பர் 04 ஆம் திகதிய 2413/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் 4 ஆம் இலக்க ஒழுங்குவிதி, அதில் "2024, திசெம்பர் 04 முதல் 2024, திசெம்பர் 20 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள்" என்பதை நீக்கி அதற்கு "2024, திசெம்பர் 04 முதல் 2025, சனவரி 10 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள்" என மாற்றுவதன் மூலம் இத்தால் திருத்தஞ் செய்யப்படுகின்றது.*

3. *2024, திசெம்பர் மாதம் 04 ஆம் திகதிய 2413/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் ஏனைய அனைத்து ஏற்பாடுகளும் மாற்றமில்லாது நடைமுறைப்படுத்தப்படும்.*

EOG *01 - 0032*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*